திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வு 100 ஜூன் 2023 முதல் மே 2024 வரை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டு, ஜூன்2024 முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் 10 . நடைபெறும் என தீர்மானித்துமுரசொலியில் அறிவிக்கப்பட்டது அதில் ஐந்து நிகழ்ச்சிகள் நடத்தி முடிக்கப்பட்டது மீதமுள்ள ஐந்து நிகழ்ச்சிகள் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிந்தவுடன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறும்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

1. 9/7/24 9 AM	முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க்கை வரலாற்று தொகுப்புகளை ரீல்ஸ் தயாரித்து வெளியிடுதல் கலைஞர் 100 FB/ YOUTUBE / TWITTER தொடங்குதல்மற்றும் 100 இளைஞர்களுக்கு வலைதள வசதியுடன் கூடிய கைப்பேசி வழங்கும் நிகழ்வு	மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி	முத்தமிழ் கருணாநிதி மாவட்ட அமைப்பாளர்	டி.ஆர்.பி.ராஜா தொழில்துறை அமைச்சர் மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் சிறப்பு அழைப்பாளர் திண்டுக்கல் ஐ.லியோனி கழக கொள்கை பரப்பு இணை செயலாளர்
2. 10/7/24 5 PM	முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெரு முனை பிரச்சாரம்	வார்டு எண் – 13,13A மலைக்கோட்டை பகுதி கழகம்	P.சங்கர், S.சரவண செல்வன், வட்ட கழக செயலாளர்கள்	தமிழன் பிரசன்னா (கழக செய்தி தொடர்பு இணை செயலாளர்)
3. 14/7/24 5 PM	முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பட்டிமன்றம்	பொதுக்குழு உறுப்பினர்கள்	எஸ்.பன்னீர் செல்வன், கே.சண்முகம், வி.தனசேகர், கே.கே.கே. கார்த்தி, உ.ராஜேஸ்வரன், ஆர்.மணி மேகலை	பட்டிமன்றத்தை துவக்கி வைப்பவர் தங்கம் தென்னரசு, நிதித்துறை அமைச்சர் விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் கலைமாமணி சொல்வேந்தர் சுகிசிவம் (பட்டிமன்ற நடுவர்) மற்றும் குழுவினர் தலைப்பு கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம்எழுதுகோலே! "செந்தமிழ்செல்வி" திருமதி சாந்தாமணி "சிந்தனை செல்வர்" சிவசக்தி வடிவேல் "சொல்லரசி" பேராசிரியர் பர்வின் சுல்தானா செங்கோலே! "கவிஞர்" மதுக்கூர் ராமலிங்கம் "முனைவர்" திருமதி. எழிலரசி "நகைச்சுவை நயாகரா" செ.மோகன சுந்தரம்
4. 20/7/24 9 AM	மாணவர் களிடேயே வினாடி, வினா போட்டிகள் மற்றும் "தேதி சொல்லும் சேதி" வரலாற்று குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு	மாநகர மாவட்ட பிரதிநிதிகள்	பா. விஜயபாலன், பி.ஜான் செல்லதுரை, கே.என்.நலங்கிள்ளி, கே.முகேஷ் குமார், என்.மோகன், பி.மணிகண்டன், ஆர்.அருண் சன்னாசி, கே.ஏ.ராஜேஷ், வ.கண்ணதாசன், பி.கோபிநாத்,	புத்தகம் வெளியிடுபவர் ஆ.ராசாஎம்.பி., கழக துணை பொது செயலாளர், புத்தகம் பெற்றுகொள்பவர் பி.கே.சேகர்பாபு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாணவ-மாணவியருக்கு பரிசு வழங்குபவர் பூச்சி முருகன் தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்
5. 21/7/24 5 PM	முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பாடும் "அரசியலில் கலைஞர்" என்ற தலைப்பில் கூட்டணி கட்சி சொற்பொழிவாளர் கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கம்	திருச்சி மாநகர கழகம் (கிழக்கு)	மு.மதிவாணன், மாநகர கழக செயலாளர்	கருத்தரங்கத்தை துவக்கி வைப்பவர் கவிஞர் வைரமுத்து கருத்தரங்க பங்கேற்பாளர்கள் எஸ்.ஜெகத்ரட்சகன் (தி.மு.க), பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்), தோழர் மகேந்திரன் (கம்யூனிஸ்ட்), மா.செ.சிந்தனை செல்வன் (வி.சி.க). செந்தில் அதிபன் (ம.தி.மு.க), ப.அப்துல் சமது (ம.ம.க)

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி
செயலாளர் –
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத்தேர்தலையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி அகரம் ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர் அய்யாதுரை, ஒன்றிய பொருளாளர் பழனிவேல், பேரூராட்சி தலைவர் பாபு (எ) செல்வராஜ் பேரூராட்சி துணைத் தலைவர் செல்வ சூரியா சேதுபதி, கிளைக் கழகச் செயலாளர்கள் மெடிக்கல் பிரகாஷ், கண்ணன், கருணாகரன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் உமா பொன்னுவேல்,வாழப்பாடி ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதி

கடப்பாறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுக!

சட்டப் பேரவையில் பர்கூர் தே.மதியழகன் கோரிக்கை!

சென்னை, ஜூலை 3 - பர்கூர் சட்டமன்றத் தொகுதி - கடப்பாறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட வேண்டும் என்று பேரவையில் பேசிய பர்கூர் தொகுதி உறுப்பினர் தே.மதியழகன் கோரிக்கை விடுத்தார்.

பேரவையில் பர்கூர் தொகுதி உறுப்பினர் தே. மதியழகன் பேசியதாவது:

நூறாண்டுகள் கண்ட இந்த மாபெரும் சபைக்கு நடுநிலை ஆசானாக அமர்ந்திருக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தை ஆண்ட சோழர்களின் ஆட்சியை, பொற்கால ஆட்சி என இலக்கியங்கள் கூறியது இராஜராஜ சோழனையும், இராஜேந்திர சோழனையும் மட்டும் மனதில் வைத்து அல்ல; இந்த திருவாரூர் சோழனையும் மனதில் வைத்துத்தான் என்று உலகத்திற்கே வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது 'திராவிட மாடலின்' முன்மாதிரியான ஆட்சி.

அறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் ஆசியுடன் கறுப்பு சிவப்பில் முளைத்த அன்பு ரோஜா முதல்வர் தளபதியார் கழகத் தலைவர் அவர்கள். தனது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களுக்காகவே சிந்தித்து, எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திடும் வகையில் பொற்கால ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கும் திருவாரூர் தந்த சோழச் சக்கரவர்த்தி முதல்வர் தளபதியார் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன்.

நாளைய வரலாற்றையே மாற்றப் போகும் தமிழக இளைஞர்களின் இதயங்களில் வாழும் நமது திராவிட மாடல் ஆட்சியின் போர் வாள், பெயரைக் கேட்டாலே அதிர வைக்கும் அஞ்சா நெஞ்சர், விளையாட்டுத் துறையைக் கையாண்டு, உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த விளையாட்டுத் துறை அமைச்சர் சின்னவர் அவர்களுக்கும், அவையின் முன்னவர் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மூத்த அமைச்சர் பெருமக்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அண்ணார் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை இந்த மாபெரும் சபைக்கு அனுப்பிவைத்த பர்கூர் தொகுதி பொது மக்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட பொது மக்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

'இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு'

என்கிற வள்ளுவனின் வார்த்தைகளை தாரக மந்திரமாகக் கொண்டு, மக்களின் எண்ணங்களை அப்படியே நிதிநிலை அறிக்கையாக உருவாக்கிய, கடைக்கோடி பாமரனும் நெஞ்சில் சுமக்கும் எங்கள் இராஜாதிராஜாவே, உம்மை பாராட்ட வார்த்தைகளின்றி தத்தளிக்கின்றேன் என்றால் அது மிகையல்ல முதல்வர் அவர்களே!

அதிலும் குறிப்பாக, குடிசை இல்லாத தமிழகத்தை உருவாக்கிட 8 இலட்சம் வீடுகள், வறுமையில்லா தமிழ்நாட்டை உருவாக்கிட 5 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கும் தாயுமானவர் திட்டம், அடுத்த 18 மாதங்களில் 75 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு, வெளிநாட்டுக் கல்வி என்பதை தொலைக்காட்சிகள் மற்றும் செய்தித் தாள்கள் மூலமாக மட்டுமே கேள்விப்பட்டிருந்த ஏழை எளிய மாணவச் செல்வங்களுக்கு அரசு சார்பில் வெளிநாட்டு கல்வி, விடியலின் பயணம், உரிமைத் தொகை, தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன், காலை உணவு, மக்களைத் தேடி மருத்துவம், இவையெல்லாம் மக்களைச் சென்று சேர்ந்ததா என்பதை அறிய 'நீங்கள் நலமா' என புதுமையான திட்டங்கள், புரட்சிகரமான திட்டங்கள், புத்துணர்ச்சி அளிக்கும் திட்டங்கள் என புதுமையிலே வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் எங்களின் புதுமையின் நாயகரே, ஒட்டுமொத்த இந்தியாவில் எவருமே சிந்தித்திடாத திட்டங்களை எல்லாம் தீட்டி, நவீன தமிழகத்தில் புதிய தலைமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கும் பாரி வள்ளலே, உமது சீர்மிகு நிர்வாகத் திறமைக்கு தமிழக மக்கள் கொடுத்த பரிசுதான் 40/40 என்பது.

சர்வதேச விமான நிலையம் அமைப்பு - முதல்வ ருக்கு நன்றி!

இது நிதிநிலை அறிக்கை மட்டுமல்ல, அனைத்து மக்களுக்குமான நீதி அறிக்கை என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமின்றி, தொழில் நகரமான ஒசூரில் 2,000 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச விமான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுத்த உயர்ந்த உள்ளமே, உங்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்'

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைகளுக்கேற்ப பகுத்தாய்ந்து, ஒவ்வொரு துறைக்கும் ஆகச் சிறந்த அமைச்சர் பெருமக்களை நியமித்து, தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பதிலளிக்க வுள்ள அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வருடம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மட்டும் 20 ஆயிரத்து 198 கோடி ரூபாய் ஒதுக்கி, தமிழக மக்களின் நல்வாழ்விற்கு உத்திரவாதம் அளித்துள்ளீர்கள். அதிலும் குறிப்பாக, மக்களைத் தேடி மருத்துவத்திற்கு மட்டும் 243 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முதன் முதலில் கிருஷ்ணகிரி மாவட்டத்திலே துவக்கி வைக்கப்பட்டு இன்று தமிழகம் முழுவதும் இலட்சக்கணக் கானோர் பயன் பெற்று வருகின்றனர்.

மேலும், சமீப காலமாக அதிகரித்துவரும் புற்று நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதற்குத் தகுந்த சிகிச்சை அளிப்பது மற்றும் புனர்வாழ்வு சேவைகளை அளிப்பதற்காக ஒரு புதிய புற்றுநோய் மேலாண்மை இயக்கத்தைக் கொண்டு வருவது தமிழக மக்களின் மீதான அக்கறையைத் தெளிவாக காட்டுகின்றது.

முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் தமிழ் நாடு நல்ல வளர்ச்சி பெற்று, அகில இந்திய அளவில் முக்கிய இடத்தில் இருப்பது மட்டுமல்லாமல், தளபதியாரின் கனவான "ஒரு ட்ரில்லியன்" பொருளாதாரத்தை தொடுவதற்கான அனைத்து அடித்தளமும் அமைக்கப்பட்டுவிட்டது .

மேலும், தமிழகத்தில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் நல்ல முறையில் தங்களின் உற்பத்திச் செயல்பாடுகளை விரிவாக்க கடந்த நிதியாண்டில் வழங்கப்பட்ட சுமார் 2 இலட்சத்து முப்பதாயிரம் கோடி ரூபாய் நடப்பாண்டில் நிபந்தனைகளை மேலும் எளிமையாக்கி மூன்று இலட்சம் கோடி ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினை ஊக்குவித்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களில், தமிழகத்தினை இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக மாற்றுவதற்கும் மாநிலத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு, பெருவாரியான வேலைவாய்ப்புகளை உருவாக்கிவிடவும், முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இந்த நல்வாய்ப்பினை வழங்கிய பேரவைக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, ஒரு சில முன்மொழிவுகளை சமர்பிக்கின்றேன். புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு நகர ஊரமைப்பு (Town Planning) அலுவலகத்தில் அனுமதி பெறுவதற்கு பத்திரம், பொது அதிகாரம் மற்றும் இடம் சார்ந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

புதிய தொழிற்சாலைகள் நடைமுறை எளிதாக்குக!

இதில் சொந்த நிலமாக இல்லாதபட்சத்தில், நிலக்குத்தகை ஆவணங்கள் 33 வருடத்திற்கு இருந்தால் மட்டுமே புதிய தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுகிறது. இதனால் புதிய தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி வாங்குவது மிகவும் கடினமாக உள்ளது. பொருளாதாரமும், மக்களின் தேவைகளும் நாளுக்குநாள் அதிகரித்துவரும் இந்தக் கால கட்டத்தில் புதிய தொழிற்சாலைகளை தொடங்க தற்போது இருக்கும் நடைமுறைகளை மேலும் எளிமையாக்கும் வகையில், குத்தகை ஆவணங்களை குறைந்தது ஐந்து வருடங்களுக்கு என்று மாற்றி அமைத்தல் வேண்டும். இதனால் அதிகப்படியான புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். அதேபோல், தற்பொழுது நடைமுறையில் உள்ள நகர ஊரமைப்பு அலுவலகத்தில் (Town planning office)ல் ஒரு புதிய தொழிற்சாலை ஆரம்பிக்க, அனுமதி பெற அதிகப்படியான ஆவணங்கள் மற்றும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது.

எனவே, இக்காலகட்டத்திற்கு ஏற்றவாறு ஒரு குழு அமைத்து அனுமதி ஆவணகளை (Approval Documents) எளிமையாக்க வேண்டும். அதேபோல், Town planning officerஐ எளிதல் அணுகும் வகையில் வழிவகை செய்ய வேண்டும்.

மேலும், புதிய தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதி பெற வேண்டுவோருக்கு தேவையான வழிகாட்டு தலை வழங்கக்கூடிய Help Desk Officer ஒருவரை நியமிப்பதின்மூலம் விரைவில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்க அனுமதி பெற முடியும்.

நாளுக்குநாள், வாகனங்கள் பயன்படுத்துவோரும், வாகனங்களின் பாகங்களை தயாரிக்கும் சிறு, குறு நிறுவனங்களும் அதிகரித்து வரும்நிலையில், அத்தொழில் நிறுவனங்களுக்கு விதிக்கப் படும் GST (Goods and Service Tax) கட்டணம் 28% சதவிகித்தை குறைத்திட வழிவகை செய்ய வேண்டும். மேலும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு மின்சார வாரியத்தின்மூலம் விதிக்கப்படும் Fixed Charges மிக அதிகமாக உள்ளதால், அதனை மாற்றி பழைய fixed Charges முறையாக இருக்கும்படி மாற்றியமைத்துத் தொழில் நிறுவனங்களுக்கு மேலும் சலுகைகளை ஏற்படுத்த வேண்டும்.

நடைமுறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்து தமிழக மக்களின் மனங்களை வென்றெடுத்த திராவிட பேரரசர் தளபதியாரின் ஆட்சியில் சமுதாயம் மேலும் ஏற்றம் காணவும், பொதுமக்கள் மகிழ்வோடு வாழவும், சில மாற்றங்களை முன்மொழிந்து அவற்றை அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அரசு மருத்துவமனையில், ஒருசில மருத்துவர்கள் நேரத்திற்கு வராமல் இருப்பது மற்றும் மருத்துவர்கள், செவிலியர்களின் அலட்சியப் போக்கால் ஏற்படும் அசம்பாவிதங்களால் பொதுமக்கள் பாதிப்புகுள்ளாகி, அதனால் அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், ஒவ்வொரு வாரமும் அரசு மருத்துவமனைகளைக் கண்காணிக்கும் வகையில் மாவட்டம்தோறும் சிறப்பு மருத்துவக் குழுவை அமைத்து, மக்கள் நலன் காத்திடவேண்டும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாங்கனிக்கு தனி காப்பீட்டுத் திட்டம்!

மேலும், மாங்கனி நகரமான கிருஷ்ணகிரி மாவட்டத்தில், சமீப காலமாக பருவமழை பொய்த்து, சரியான அறுவடை இல்லாமல் கிருஷ்ணகிரி மாவட்ட மாங்கனி உற்பத்தி விவசாயிகள் பெரும் கடனாளிகளாக மாறி, அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களின் துயரங்களை நீக்கும் வகையில் மாங்கனி உற்பத்திக்குத் தனி காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த ஆவண செய்யவேண்டும் என்று விவசாயிகளின் உற்ற தோழனான தளபதியாரிடம் வேண்டி கேட்டு கொள்கின்றேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உருது வழிக் கல்வி பயிலும் ஏழை, எளிய இஸ்லாமிய மாணவர்களுக்கு ஒரே ஒரு மேல்நிலைப்பள்ளி ஒசூரில் மட்டுமே உள்ளது. ஆதலால், உருது வழியில் தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்வி படித்த மாணவர்கள் சுமார் 50 முதல் 95 km வரை பயணம் செய்தே கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை நிலவி வருகிறது. கிருஷ்ணகிரியின் மையப்பகுதியில் உருது மேல்நிலை பள்ளி வேண்டும் என்பது கிருஷ்ணகிரி மாவட்ட இசுலாமியர்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்த வருகின்றது. அனைத்து மக்களுக்குமான சமத்துவ நாயகர் தளபதியார் அவர்கள் இந்த கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து ஆவண செய்யவேண்டும்.

பர்கூர் மற்றும் போச்சம்பள்ளி வட்டத்தில் அரசு விளையாட்டு அரங்கம், அரசு கலைக் கல்லூரி மற்றும் புதிய வட்டார வளர்ச்சி அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. அதைக் கருணையுள்ளத்தோடு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கிருஷ்ணகிரி, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஓரப்பம் கந்திகுப்பம் நான்கு வழிச் சாலை சந்திப்பில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும்வண்ணம் உயர் மட்டப் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்பது பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அருகிலுள் படேதாளா ஏரியிலிருந்து அச்சங்கலம் ஏரி, கப்பல்வாடி தீர்த்தகிரிப்பட்டி ஏரி, குட்டூர் ஏரிகளில் வழியாக காகங்கரைக்கு நீர்கொண்டு செல்லும் கால்வாய் அமைத்துத் தர வேண்டும். மேலும், காவேரிப்பட்டணம் ஒன்றியத்திற்குட்பட்ட சந்தனூர் ஏரியிலிருந்து உபரிநீரை கொட்டாவூர், பாப்பாரப்பட்டி, சின்ன புளியம்பட்டி, வையம்பட்டி, இருமத்தூர், காராமூர் மற்றும் சாமாண்டப்பட்டி ஆகிய ஏரிகளுக்கு தண்ணீர் வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்கராபேட்டை வனப் பகுதியில் திருப்பத்தூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் தண்ணீர் கடப்பாறை ஆற்றின் வழியாக வந்து ஊத்தங்கரை பகுதிகளுக்கு செல்கிறது. இந்தக் கடப்பாறை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டினால் அதனைச் சுற்றியுள்ள சிங்கரா பேட்டை. நாயக்கனூர் ஆகிய கிராமங்கள் வளர்ச்சிபெறும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி நகர மக்களின் அடிப்படை சேவையை முடக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த சுங்கச்சாவடியை வேறு இடத்திற்கு மாற்றவும் அதேபோல அந்தநாள் வரை குறைந்தபட்சம் TN24 என்ற கிருஷ்ணகிரி மாவட்ட பதிவெண் கொண்ட வாகனங்களுக்கு டோல்கேட் வசூல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஊத்தங்கரையில் Critical Care Hospital அமைப்பதாக இருந்தது. அதை தெகினிகோட்டைக்கு மாற்றிவிட்டார்கள். அதனால் அந்தப் பகுதி மக்களெல்லாம் நிறைய கம்பெனிகள் அங்கு வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுக்கு அது கிடைக்காமல் இருக்கறது. அதை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களையும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அந்த Critical Care Hospitalஐ அமைத்துக் கொடுக்க வேண்டும். அதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்ட மருத்துவக் கல்லூரிக்கு Cath Lab வழங்கி அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு உறுப்பினர் தே.மதியழகன் பேசினார்.